சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 10/2021

பெயர் திருமதி. மகாலட்சுமி நாள்.02.02.2026
க/பெ. தவளகிரி

**பிரதி வாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 1ம் பிரதிவாதி என் கணவர் என்றால் சரிதான். வாதிகள் கிரையம் கொடுக்கவில்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் நாங்கள் கிரையம் பெற்றுள்ளோம். வழக்கு சொத்தின் புல எண் 287/21B என்றால் சரிதான். அந்த சொத்து ஏற்கனவே எல்லப்பனுக்கு உரிமையானது என்றால் சரிதான். எல்லப்பனுக்கு பாலகிருஷ்ணன், சுப்ரமணி, ராமதாஸ் மற்றும் ஏழுமலை ஆகியோர் பிள்ளைகள் என்றால் சரிதான். எல்லப்பன் இறந்த பிறகு மேற்கண்ட 4 பேரும் சொத்துக்களை பதிவான ஆவணம் மூலம் பாகம் பிரித்துக் கொண்டனர் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் புல எண் 287/21B பாலகிருஷ்ணனுக்கு பாகத்தில் வைக்கப்பட்டது என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் மேற்கண்ட புல எண்ணில் 69 செண்ட் கிரையம் கொடுத்தார் என்றால் 1 ஏக்கர் 15.5 செண்ட் கிரையம் கொடுத்தார். புல எண் 287/21 Bல் பாலகிருஷ்ணனைத் தவிர்த்து வேறு யாரிடமிருந்தும் சொத்துகள் கிரையம் பெறவில்லை.

2. வழக்கு சொத்தின் பட்டா எல்லப்பன் பெயரில் உள்ளது. மேற்கண்ட புல எண்ணில் 69 செண்ட் தான் எங்களுக்கு உரிமை என்றாலும், மீதமுள்ள சொத்து வாதிகளுக்கு உரிமையான சொத்து என்றாலும் சரியல்ல. 69 செண்ட்டை தவிர்த்து

மீதமுள்ள சொத்துகளை வாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் குப்புசாமி, பொன்னன், செங்கேனி மற்றும் ஏகாம்பரம் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்ற ஆவணம் செல்லாது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் பிரதிவாதிகளின் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை அபகரிக்கும் நோக்குடன் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.